





We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## டிசம்பர் - 2019

*We Are Here..!! To Guide You..!!*






# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## டிசம்பர் - 18.12.2019

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**WeShine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- தேசிய நிகழ்வுகள்
- சர்வதேச நிகழ்வுகள்
- விருதுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- முக்கிய தினங்கள்









## தமிழக நிகழ்வுகள்

- அண்ணா பல்கலைக்கழகத்தை இரண்டாக பிரிக்க வேண்டுமா? என்பது குறித்து அரசுக்கு பரிந்துரை செய்ய தமிழக அரசு 5 அமைச்சர்கள் கொண்ட குழுவை அமைத்துள்ளது.
  - அண்மையில் மத்திய அரசு அறிவித்த மேம்பட்ட கல்வி நிறுவன அந்தஸ்து திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட நாட்டின் தலைசிறந்த 10 பல்கலைக் கழகங்களில் அண்ணா பல்கலைக்கழகம் ஒன்றாகும்.
  - இந்த திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ள **10 அரசு உயர்கல்வி நிறுவனங்களுக்கு ஆண்டுக்கு 200 கோடி** வீதம் 5 ஆண்டுகளுக்கு 1000 கோடி ரூபாய் **வளர்ச்சி நிதி வழங்கப்படும்.**
  - **செய்தி துளிகள்**
    - தமிழக அரசின் அண்ணா பல்கலைக் கழக சட்டம் 1978-ம் ஆண்டு இயற்றப்பட்டது.
    - அண்ணா பல்கலைக் கழகச் சேர்க்கையில் தற்பொழுது 69% இடஒதுக்கீடு முறை பின்பற்றப்பட்டு வருகிறது.
    - 5 அமைச்சர்கள் குழு : கே.ஏ. செங்கோட்டையன், கே.பி. அன்பழகன், தங்கமணி, டி.ஜெயக்குமார், சி.வி. சண்முகம்

## தேசிய நிகழ்வுகள்

- “கிஸான் சம்மேளன்” விவசாயிகள் நலத்திட்ட உதவி வழங்கும் திட்டம் - ராஜஸ்தான் அரசு தொடக்கம்
    - திட்டத்தின் நோக்கம் : **“விவசாய விளைப்பொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்கவும், சரியான நேரத்தில் மானியம் கிடைக்கச் செய்தல், காப்பீட்டு உரிமைக்கோருதலுக்கான தீர்வு”**
    - மேலும் இராஜஸ்தான் மாநில அரசு விவசாய விளைபொருள்களுக்கு நியாயமான விலையை வழங்கவும், அவர்களது வருமானத்தை உயர்த்தவும் ரூ. 1000 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.
    - **செய்தி துளிகள்**
        - ராஜஸ்தான் அரசு விவசாயிகளுக்கு ஒரு யூனிட் மின்சாரத்தை 0.90 பைசா வீதம் மானிய விலையில் வழங்கி வருகிறது.
        - “பூமி விகாஸ் வங்கி” மூலம் விவசாய கடனுதவியை ராஜஸ்தான் அரசு வழங்கி வருகிறது.
        - கடந்த ஜூலை மாதம் மாநில பட்ஜெட்டில் “கிஸான் சம்மேளன்” விவசாயிகள் நல நிதி திட்டம் அறிவிக்கப்பட்டிருந்தது.

## சர்வதேச நிகழ்வுகள்

- **பாலின விகித பட்டியலில் இந்தியாவுக்கு 112-ஆவது இடம்.**
    - உலக பொருளாதார கூட்டமைப்பு (டபிள்யூ இ எ.்.ப்) பாலின விகித பட்டியலை வெளியிட்டுள்ளது.

WeShine Academy™

- பொருளாதார வாய்ப்பு, அரசியல் அதிகாரமளித்தல், உடல்நலம், கல்வி உள்ளிட்டவற்றை அடிப்படையாக கொண்டு கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது.
- **செய்தி துளிகள்**
    - உலக அளவில் பாலின சமநிலையை கடைப்பிடிக்கும் ஐஸ்லாந்து இந்தப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.
    - உலக அளவில் தற்போது 25.2 சதவீதம் பெண்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக உள்ளனர்.
    - இவ்வறிக்கையின்படி ஆண்களை ஒப்பிடும்போது அரசியலில் 95 ஆண்டுகள் பின்தங்கியவர்களாக உள்ளனர்.
    - 153 இடத்தில் உள்ள யேமன் உலகிலேயே பாலின விகிதம் அதிகம் உள்ள நாடாக உள்ளது.

## விருதுகள்

- **"நானோ" துறையில் சிறந்து விளங்கியதற்காக ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக பேராசிரியர் பாத்தீமாவு-க்கு குடியரசு தலைவர் விருது** வழங்கினார்.
    - டெல்லியில் நடைபெற்ற மத்திய பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்கள் கூட்டம் நடைபெற்று வருகிறது.
    - **செய்தி துளிகள்**
        - மத்திய பல்கலை கழக மானியச் சட்டம் (யுஜிசி) 1956-ம் ஆண்டு இயற்றப்பட்டது.
        - கோவா மாநிலத்தை தவிர்த்து அனைத்து

மாநிலங்களிலும் மத்திய பல்கலைக் கழகங்கள் செயல்பட்டு வருகின்றன.

## விளையாட்டு நிகழ்வுகள்

- **2019-ம் ஆண்டிற்கான ஐசிசி சிறந்த கிரிக்கெட் வீராங்கனைக்கான விருதுக்கு எலிசா பெரி தேர்வு** செய்யப்பட்டுள்ளார்.
    - ஆண்டுதோறும் ஐசிசி சிறந்த வீராங்கனைக்கு ராக்கேல் ஹீஹோ ஃபிளின்ட் பெயரில் விருது வழங்கி வருகிறது.
    - வளரும் வீராங்கனை விருது தாய்லாந்தின் சனிந்தா வென்றுள்ளார்.
    - **செய்தி துளிகள்**
        - ஐசிசி டி20, ஒருநாள் கனவு அணிகளுக்கு ஆஸ்திரேலிய வீராங்கனை மெக் லேன்னிங் கேப்டனாக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

## முக்கிய தினங்கள்

- **சர்வதேச குடிபெயர்ந்தோர் தினம் - டிசம்பர் 18**
    - நோக்கம் : ஒவ்வொரு நாடும் தங்கள் நாட்டில் குடியேறுபவர்களை தனது சொத்தாக மதித்து நடத்த வேண்டும் என்பதற்காக 2001-ம் ஆண்டிலிருந்து கொண்டாடப்பட்டு வருகிறது.
    - பெரும்பாலும் வேலை வாய்ப்பிற்காக பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் வெளிநாடுகளுக்கு சென்று குடியேறுகின்றனர்.

We Shine Academy TM

# திருக்குறள்

**குறள் எண் : 50**

குறள் பால் : அறத்துப்பால்

குறள் இயல் : இல்லறவியல்

குறள் அதிகாரம் : இல்வாழ்க்கை

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்**

**தெய் வத்துள் வைக்கப்படும்.**

**விளக்கம் :** இவ்வுலகத்தில் வாழ வேண்டிய முறைப்படி வாழ்கின்றவன், மேலுலகத்திலுள்ள தேவர்களுள் ஒருவனாக மதிக்கப்படுவான்.